TNKR080005502025

**சார்பு நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை :– திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 24–ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.240/2025**

**CNR NO.TNKR08-000550-2025**

கனரா வங்கி, பணிக்கம்பட்டி கிளை,
பை அதன் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ... வாதி

.... எதிர் .....

V.பெருமாள் ... பிரதிவாதி

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,73,954/–ஐ 10.30% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதி வங்கியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 07.08.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 19.06.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 24.06.2026 |
| வாதிக்காக | : | திருமதி. R.R.ரேவதி – வழக்கறிஞர் |
| பிரதிவாதி | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். |

**1) பிராதின் சுருக்கம் :–**

வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய கடன் வேண்டி கடந்த 28.03.2016–ம் தேதி அன்று விண்ணப்பம் கொடுக்க, மேற்படி பிரதிவாதியின்

ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிக்கு ரூ.75,000/−ம் கடனாக கொடுக்க, பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை. அதனால், வாதியின் வங்கியானது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,73,954/−ஐ 10.30% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3) வாதி வங்கி தரப்பில், வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர் நல்லகொண்டா வெங்கடேஷ் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) **தீர்வு :−**

**5 (அ)** வா.சா.1 அவரது முதல் விசாரணையில், வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய கடன் வேண்டி கடந்த 28.03.2016−ம் தேதி அன்று விண்ணப்பம் கொடுக்க, மேற்படி பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிக்கு ரூ.75,000/−ம் கடனாக கொடுக்க, பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், அதனால், வாதியின் வங்கியானது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி

பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.1,73,954/–ஐ 10.30% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

5 **(ஆ)** வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் ரூ.75,000/– கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாதது அவருக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் கடன் பெற்றுக்கொண்டு, ஆவணங்கள் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்கிற சங்கதியை வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதியானவர் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.1,73,954/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.75,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் இரண்டு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 24–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.24 15:49:19 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – நல்லகொண்டா வெங்கடேஷ் (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.08.2023 | அதிகார கடிதம் – ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.2 | 28.03.2016 | அனுமதி குறிப்பாணை – அசல் |
| வா.சா.ஆ.3 | 28.03.2016 | கடன் ஒப்பந்தப் படிவம் – அசல் |
| வா.சா.ஆ.4 | 10.07.2019 | கடன் ஏற்புப் படிவம் – அசல் |
| வா.சா.ஆ.5 | 23.08.2021 | கடன் ஏற்புப் படிவம் – அசல் |
| வா.சா.ஆ.6 | 30.03.2024 | கடன் ஏற்புப் படிவம் – அசல் |
| வா.சா.ஆ.7 | 26.02.2025 | கடன் கணக்கு அறிக்கை – கம்யூட்டர் காப்பி |
| வா.சா.ஆ.8 | 28.02.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | 11.03.2025 | அறிவிப்பு பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட ரிட்டன் கவர் மற்றும் ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.24 15:49:23 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.